**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்.

**ந.க.எண். 016584 / டி (2) /2022 நாள் : 24.08.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயகக்கம், சென்னை – 6 – அக்டோபர்–2022 தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, தனித்தேர்வர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்பது குறித்து வானொலி / தொலைக்காட்சிகளில் அறிவிக்கவும் நாளிதழ்களில் செய்திக் குறிப்பாக வெளியிடக் கோருதல் – சார்பு

******

அக்டோபர் 2022–ல் நடைபெறவிருக்கும் தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு தனித் தேர்வர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்வது மற்றும் தேர்வுக்கால அட்டவணை குறித்தான **செய்திக்குறிப்பு** ஒன்றினை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பொதுமக்களின் நலன்கருதி மேற்படி தகவல்களை அனைத்து மாவட்டங்களிலும் இதனை வானொலியில் / தொலைக்காட்சிகளில் / பத்திரிகையில் செய்தியாக ஒலி / ஒளி பரப்புமாறும் / வெளியிடுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது "**விளம்பரம் அல்ல** "என தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு**

செய்திக்குறிப்பு மற்றும் தேர்வுக்கால அட்டவணை

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்– தங்கள் ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி, மாணவர்களை அனுமதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள் – மேற்படி விவரத்தினை தங்கள் உள்ளூர் செய்தித்தாட்களில் செய்தியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்நாடு அரசு**

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006**

**அக்டோபர் –2022 தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு**

**செய்திக்குறிப்பு**

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

அக்டோபர் 2022–ல் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு 01.10.2022அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் 06.09.2022 முதல்10.09.2022 வரைwww.dge.tn.gov.inஎன்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) நேரில் சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–மொத்தம் ரூ.175/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாக செலுத்தலாம்.

**மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 12.09.2022 மற்றும் 13.09.2022 ஆகிய நாட்களில் தட்கல் விண்ணப்ப கட்டணத்தொகை ரூ.500/– கூடுதலாக செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.**

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

**1. முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் சான்றிடப்பட்ட தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**2.ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

- தனித்தேர்வர்கள் ரூ.42–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை www.dge.tn.gov.inஎன்ற இணையதளத்தில் காணலாம்.

ஓம்/–

இயக்குநர்

இடம் : சென்னை–600 006

நாள் : 24.08.2022

**தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை**
**தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு**
**அக்டோபர் – 2022**

**தேர்வுக்கால அட்டவணை**

| தேதி | கிழமை | நேரம் | பாடம் |
|---|---|---|---|
| 10.10.2022 | திங்கட் கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | தமிழ் |
| 11.10.2022 | செவ்வாய் கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | ஆங்கிலம் |
| 12.10.2022 | புதன் கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | கணிதம் |
| 13.10.2022 | வியாழக் கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | அறிவியல் |
| 14.10.2022 | வெள்ளிக் கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | சமூக அறிவியல் |

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம்:** சென்னை–6
**நாள்:** 24 .08.2022